# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020–ம் ஆண்டு ஜுன் மாதம் 30–ம் தேதி ( 30.06.2020) செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. க. குப்பு, என்பவர் 30.06.2020 அன்று ஓய்வு பெற உள்ளார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி. க. குப்பு, துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1993–2020 வரை சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 11.08.1993 |
| 2 | ஓய்வுபெற்ற நாள் | 30.06.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 11/2005 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 11.8.1993 முதல் 30.06.2020 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.18659/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ .10000/– |
| | **மொத்தம்** | ரூ.31619/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திருமதி. க. குப்பு, துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 18659/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10000/– சேர்த்து மொத்தம் ரூ.31619/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 1563/2020/பி2**

**தீர்மான எண் : 72A அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .2.** இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தீபாவளி முன்பணம் வழங்கப்பட்டு மாதந்தோறும் அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. அதில் கீழ்கண்ட துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை வழங்க கோரப்பட்டதற்கிணங்க, முன்பண பதிவேடு மற்றும் ஊதியப் பதிவேடு ஆய்வு செய்யப்பட்டதில் முன்பணம் கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

| வ.எண் | பெயர் | பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.S.சக்திவேல்,<br>துப்புரவு அலுவலர் | ஏப்ரல்–2020 | ரூ. 1,000 /– |
| 2 | திரு.S.பாலமுருகன்,<br>துப்புரவு பணியாளர் | டிசம்பர்–2018, பிப்ரவரி–2019<br>மற்றும் ஜூன்–2019 | ரூ. 1,500 /– |
| 3 | திரு.J.பாலமுருகன்,<br>துப்புரவு பணியாளர் | ஆகஸ்ட்–2019 | ரூ. 1,000 /– |
| | | **மொத்தம்** | **ரூ. 3,500 /–** |

எனவே அவர்களுக்கு கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 902/2013/பி2**

**தீர்மான எண் : 73 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** நெல்லிக்குப்பம் நகராட்சி, குடிதாங்கி கிராமம் வார்டு–C, பிளாக்–18, T.S.No.107, என்ற இடமானது நகராட்சிக்கு சொந்தமான கால்நடை மருத்துவமனை இடமாகும். இவ்விடத்தில் தனி நபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க பொறியியல் பிரிவு மூலம் கம்பி முள் வேலி அமைக்க முற்படும் போது திரு. நாராயணன் என்பவர் ஆணையாளரை 2ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு நிரந்தர உறுத்து கட்டளை கோரி O.S.No.28/2020 மற்றும் I.A.No.53/2020 வழக்குத் தாக்கல் செய்துள்ளார். மேற்காணும் வழக்கிற்கான வழக்கறிஞர் ஊதியம் மற்றும் நீதிமன்ற செலவினங்களுக்காக ரூ.5550/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.536/2020/எப்1)**

**தீர்மான எண் : 74 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .4.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கொரான வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக குளோரின் குடி தண்ணீர் கலப்பதற்கு பிளாஸ்டிக் பேரல் 3 எண்ணிக்கை வாங்கி வழங்கியதற்கு ரூ.3000/– திரு.N.சந்திரசேகர், நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண். 1633/2020/இ1**

**தீர்மான எண் : 75 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .5.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கொரான வைரஸ் அவசர அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட வான்பாக்கம் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்திரவின் படி தென்பெண்ணை ஆற்றங்கரையின் அருகில் காவல் துறைக்கு சொந்தமான சோதனை சாவடியில் அங்கு பணியாற்றும் பெண் பணியாளர்கள் சுகாதார வசதிக்காக தற்காலிக ‘‘மொபைல் டாய்லெட் ‘‘ செய்து கொடுத்ததிற்கு ரூ.4350/– திரு.N.சந்திரசேகர், நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண். 1634/2020/இ1**

**தீர்மான எண் : 76 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .6.** நெல்லிக்குப்பம் நகராட்சி கொரான வைரஸ் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கொரான வைரஸ் அவசர அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட வான்பாக்கம் மற்றும் பட்டாம்பாக்கம் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்திரவின் படி தென்பெண்ணை ஆற்றங்கரையின் அருகில் காவல் துறைக்கு சொந்தமான இரண்டு சோதனை சாவடிகளுக்கு இரண்டு மாதத்திற்கு நகராட்சி அலுவலர்கள் மற்றும் காவல் துறை காவலர்கள் பணிபுரிய சார்மினார் 4 எண்ணிக்கை , டேபில் 4 எண்ணிக்கை மற்றும் சேர் 10 எண்ணிக்கை (வாடகைக்கு) செய்து கொடுத்ததிற்கு ரூ.81780/– திரு.N.சந்திரசேகர், நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .
**தீர்மான எண் : 77 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**
**ந.க.எண். 1307/2020/இ1**

**மன்றபொருள் .7.** நெல்லிக்குப்பம் நகராட்சி கொரான வைரஸ் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கொரான வைரஸ் அவசர அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட வான்பாக்கம் மற்றும் பட்டாம்பாக்கம் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்திரவின் படி தென்பெண்ணை ஆற்றங்கரையின் அருகில் காவல் துறைக்கு சொந்தமான இரண்டு சோதனை சாவடிகளுக்கு மின் வசதி செய்து கொடுத்ததிற்கு ரூ.58600/– திரு.M.செந்தாமரைக்கண்ணன் , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .
**ந.க.எண். 1306/2020/இ1**
**தீர்மான எண் : 78 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .8.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கிழ் வாழப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தண்ணீர் தொட்டி மின் மோட்டார் பம்பு மும்முனை மின் இணைப்பில் உள்ள 100 AMS பியூஸ் யுனிட் காலம் 3 எண்ணிக்கை மற்றும் பியூஸ் பிளேட்டுகள் 3எண்ணிக்கை உடைந்து விட்டதை புதியதாக வாங்கி பொருத்திதிதற்கு ரூ.4800/– Enoch Electricals , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .
**ந.க.எண்.011 /2020/இ1**
**தீர்மான எண் : 79 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .9.** நெல்லிக்குப்பம் நகராட்சி துாய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17 நிதியின் கீழ் ரூ.74,00,000/– மதிப்பீட்டில் ஆரோக்கியசாமி தெரு உரக்கிடங்கில் பல ஆண்டு காலமாக சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து உயர் சுரங்க (BIO MINING) முறை மூலம் அகற்றி நிலத்தை மறு சீரமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது . மேற்படி பணிக்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தப்பட்டு சோதனை அடிப்படையில் சோதனைகள் செய்யப்பட்டுள்ளது . தற்சமயம் மேற்படி குப்பைகளை “ தர அளவீடு” செய்வதற்கு சென்னை , அண்ணா பல்கலைக்கழகம் சுற்று சூழல் மையம் ஆய்வு செய்து குப்பைகளின் மொத்த அளவீடு பெற வேண்டியுள்ளதால் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு கடிதம் அனுப்பியதில் அண்ணா பல்கலைக்கழகம் Lr No CES/DIR/Nellikuppam Municipality /2018–19 நாள்.12.03.2019 ல் ரூ.354000/– கட்டணம் செலுத்த கோரியுள்ளார்கள் . இதனை பணியின் அவசர அவசியம் கருதியும் , உடன் பணியை செய்து முடிக்க வேண்டிய காரணத்தாலும் இத் தொகையை துாய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17ன் கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு .1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தற்போது கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக நகராட்சி வரி வசூல் பாதிப்படைந்த நிலையிலும் , சொத்த வரி சீராய்வு திரும்ப பெற்றதால் கேட்பு தொகையும் குறைந்தப்

படியாலும் , பணியின் அவசர அவசியம் கருதி தற்போது SBM – SWM திட்ட நிதியிலிருந்து மேற்கண்ட தொகையினை வழங்கியும் பின்னர் பொது நிதியிலிருந்து ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் .

**<u>ந.க.எண். 2023 /2016/இ1</u>**

**<u>தீர்மான எண் : 80 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**மன்றபொருள் .10.** இந்நகராட்சியில் பணிபுரியும் திரு. பா. செந்தில்வேலன் இளநிலை உதவியாளர் சார்பாக திரு . PJX . வேதநாயகம் வழக்கறிஞர் என்பவர் இந்நகராட்சி ஆணையருக்கு நோட்டிஸ் வழங்கியுள்ளார் . மேற்காணும் வழக்கறிஞர் நோட்டிஸ்க்கு உரிய பரிதினை இந்நகராட்சி வழக்கறிஞர் திரு . சீனு.ஜெயராமன் மூலம் தயார் செய்து திரு . PJX . வேதநாயகம் வழக்கறிஞர் என்பவருக்கு வழங்கிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.1500/– நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . 1.மன்றம் அனுமதிக்கலாம் .

2. மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**<u>ந.க.எண். 6112/2016/சி1</u>**

**<u>தீர்மான எண் : 81 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்த அங்கீகரிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள் .11.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ AE 5944 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் 1. ஜாயின்ட் ஸ்டார் மாற்றியது 2. சைலன்சர் பற்ற வைத்தது 3. ஸ்பிரிங் புஷ் மாற்றியது மற்றும் லேபர் உள்பட ரூ.4750/– செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1659/2020/இ1**

**<u>தீர்மான எண் : 82 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள் .12.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BAE 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சாமி வீல் அலைப்மெண்ட் வரி செய்யப்பட்தற்கு ரூ.900/– செலவினம் திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு.P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1660/2020/இ1**

**<u>தீர்மான எண் : 83 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள் .13.** நெல்லிக்குப்பம் நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் புற நோயாளி பிரிவு கட்டப்பட்டு (1905) சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . தற்சமயம் மேற்றடி கட்டிடம் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது . சுவர்கள் பழுதடைந்தும் , மேற்கூரைகள் பழுதடைந்தும் மிக மோசமான நிலையில் உள்ளது . எனவே மேற்படி நோயாளிகளின் பயன்பாட்டை கருத்தில் கொண்டு பழுதடைந்த கட்டிடத்தை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய மருத்தவமனை கட்டிடம் கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1492/2020/இ1**

**<u>தீர்மான எண் : 84 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள் .14.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தணிக்கை தடை முடிவுற்ற காலம் சென்ற கீழ் கண்ட பணிகளின் ( 2009 , 2010, 2011 ,2012 , 2013, 2014 ,2015, 2016 மற்றும் 2017 ) வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஒப்பந்ததாரர் M/s.அருணாச்சல அசோசியேட் , 398,மெயின் ரோடு, நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

1. நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண் .19 ஜெயலட்சுமி நகரில் குடிநீர் பகீர்மான குழாய் அமைக்கும் பணி . ரூ .75,000/–
2. ஜம்புலிங்கம் பூங்கா அருகில் உள்ள கழிவறை சுற்று சுவர் அமைக்கும் பணி . . ரூ.3,00,000/–
3. வார்டு எண் .14 திருக்கண்டேஸ்வரம் மேட்டுத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி . ரூ .1.,50,000/–
4. வார்டு எண் .23 .நடேசன் தெருவில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல் பணி . ரூ.9,60,000/–
5 மீன் மார்கெட்டில் தறகாலிக பராமரிப்பு பணிகள் செய்தல் . (தானே புயல் நிதி) . ரூ.10,00,000/–
6. கோழி இறைச்சி கடையை தறகாலிக பராமரிப்பு பணிகள் செய்தல் . (தானே புயல் நிதி) . ரூ.10,00,000/–
7. ஆட்டு இறைச்சி கடையை தறகாலிக பராமரிப்பு பணிகள் செய்தல் . (தானே புயல் நிதி) . ரூ.10,00,000/–
8. நகராட்சி பணிக்கு மைக் செட்டுகள் சப்ளை செய்தல் பணி . ரூ.30,000/–
9. வார்டு எண் .7 , கைலாச நாதர் கோயில் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணி . ரூ .2.,50,000/–
10. வார்டு எண் .2 , வான்பாக்கம் மேல் நிலை நீர்தேக்க தொட்டி 15.HP சம்மெர்சிபில் மெட்டிரியல் பொருத்துதல் பணி . ரூ .1.,00,000/–
11. குடிநீர் ஆண்டு பராமரிப்பு பணி . 2016–17. ரூ.10,00,000/–

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1649/2020/இ1)**

**<u>தீர்மான எண் : 85 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள் .15.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ள காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நெல்லிக்குப்பம் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட போது இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும் தூய்மைப் பணி, கிருமி நாசினி தெளிப்பு மற்றும் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு காரணமாக ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம், பொறியாளர் அவர்களின் ஈப்பு வாகனம் மற்றும் சுகாதார துறையில் உள்ள மூன்று டாடா ஏசிஸ் வாகனங்களில் புதிதாக ஒலிப்பெருக்கி வாங்கி பொறுத்தி அதன் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் விளம்பரம் செய்திடுமாறு தெரிவித்துள்ளார். எனவே, அவசர அவசியம் கருதி நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.என்.சந்திரசேகர் என்பவர் மூலம் புதிதாக ஒலிப்பெருக்கிகள் வாங்கி வாகனங்களில் பொருத்தப்பட்டதற்கு தொகை ரூ.37,800/– ஆகும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920ன் பிரிவு–15ன் கீழ் இத்தொகையினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.என்.சந்திரசேகர் என்பவருக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண்.1030/2020/எச்1**

**<u>தீர்மான எண் : 86 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**மன்றபொருள் .16.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கிருமிநாசினிகள் அனைத்து வார்டுகளில் உள்ள தெருக்களில் டிராக்டர், டிரெய்லர் மூலம் விசை தெளிப்பான் உதவியுடன் முழுமையாக தெளித்தமைக்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ.7,000/– வீதம் 28 நாட்களுக்கு ரூ.1,96,000/– பட்டியல் தொகை திருமதி.எஸ்.பரிமளா, ஒப்பந்ததாரர் என்பவருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு– 15ன் கீழ் தொகை வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**<u>தீர்மான எண் : 87 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**மன்றபொருள்.17.** நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் உருவாகும் திடக்கழிவுகளை நகராட்சி பணியாளர்கள், நகராட்சி மூலம் சேகரிக்கப்படும் குப்பைகளுடன் சேமித்து எடுத்து செல்லாமல், தனியாக சேகரித்து மருத்துவ கழிவுகள் சேகரித்து எடுத்து செல்லும் நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்நிறுவனத்தினால் அனுப்பப்படும் வாகனம் மூலம் இக்கழிவுகளை எடுத்து சென்று பாதுகாப்பான முறையில் அழித்திட நடவடிக்கை மேற்கொள்ள

மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் உள்ள ஏனைய நகராட்சிகள் தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு கழிவுகளை எடுத்து செல்கின்ற படியால், நெல்லிக்குப்பம் நகராட்சியிலும் தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட், சென்னை நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திடவும், அந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 15kgs கழிவுகள் அகற்ற மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– நிர்ணயம் செய்தும் கூடுதலாக உருவாகும் கழிவுகள் கிலோ ஒன்றுக்கு ரூ.46/–ம் என அரசு நிர்ணயம் செய்துள்ள தொகையினை வழங்கிட தெரிவித்துள்ளதினால், மேற்க்கண்டவாறு தொகை செலுத்திட அந்நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திடவும், இனி வரும் காலங்களில் கொரோனா தொற்று ஏற்படும் சமயத்தில் தொற்று உள்ளவர்கள் வீட்டில் உருவாகும் கழிவுகளை அச்சமயத்திலும் எடுத்து செல்வதற்கான கட்டணம் செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணி மிகவும் அவசர அவசியமாக உள்ளதாகவும், பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், ஒப்பந்தம் செய்திடவும், தொகை செலுத்திடவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் நடவடிக்கை மேற்க்கொண்டதினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

<u>**தீர்மான எண் : 88 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

**மன்றபொருள்.18.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆலை ரோட்டில் உள்ள சமுதாயக்கூடம் அருகே ஆவின் பாலகம் வைத்துக்கொள்ள நெல்லிக்குப்பம் திருவள்ளுவர் நகர் திரு.G.அமர்நாத் த/பெ கணபதி என்பவர் விண்ணப்பித்ததின் பேரிலும் கடலூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் ந.க.எண் :62/ப.ம.அ/2019, நாள்:10.10.2019இல் ஆவின் பாலகம் வைத்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளதின் பேரில் நெல்லிக்குப்பம் ஆலை ரோடு சமுதாயக்கூட வாசலின் ஒரு பகுதியில் (வடக்குப் பகுதியில் ) 8x6 அளவில் மாதம் ஒன்றுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் ரூ.300/- (ஜி.எஸ்.டி.நீங்கலாக) நிர்ணயம் செய்யவும் மேற்படி பங்கிற்கு மின்வசதி செய்து டெபாசிட் பெற்று தரை வாடகைக்கு ஒப்படைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. கடலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பரிந்துரையின் பேரில் வரப்பெற்ற மாற்றுத்திறனாளிக்கு தரை வாடகை நிர்ணயம் செய்து ஆவின் பாலகம் வைத்துக்கொள்ள மாத வாடகை ரூ.300/க்க அனுமதிக்க

2.அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அவகளின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்க மேற்படி நிர்ணயக்கப்பட்ட வாடகையை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்ற அனுமதிக்கலா

**ந.க.எண்:3320/2019/அ1**

<u>**தீர்மான எண் : 89 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

**மன்றபொருள்.19.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தணிக்கை தடை முடிவுற்ற காலம் சென்ற கீழ் கண்ட பணிகளின் ( 2009 , 2010, 2011 ,2012 , 2013, 2014 ,2015, 2016 மற்றும் 2017 ) வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஒப்பந்ததாரர் திரு.பரிஷித் , ஒப்பந்ததாார் , 43/22, பாரதியார் தெரு , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

1. வார்டு எண் .30 , சரவணபுரம் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி . ரூ .10.00,000/–
2. வார்டு எண் .20 , மோரை தெருவில் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணி . ரூ .6,00,000/–

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1415/2020/இ1)**

<u>**தீர்மான எண் : 90 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**</u>

**மன்றபொருள்.20 .** மத்திய அரசின் 1994ம் ஆண்டு நீதி சட்டம் இயல் 5ன் படி சேவை அறிமுகாபடுத்தப்பட்டுள்ளது எனவே 01.06.2007 முதல் உள்ளாட்சி நிறுவனங்கள் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அசையா சொத்துக்களை தனியாருக்கு வணிக நோக்கத்திற்காக குத்தகை

விடும் நேர்வுகளில் வசூலிக்கப்படும் தொகையுடன் சேர்த்து சேவைவரி செலுத்தப்பட வேண்டும் வெற்றிபெறும் ஏலதாரின் குத்தகை தொகையுடன் சேர்த்து சேவைவரி வசூல் செய்து மத்திய அரசின் சேவைவரி கணக்கிற்கு செலுத்த வேண்டும் கடலூர் CENTRAl OFFICE OF THE COMMISSIONER OF GST & CENTRALEXCISE TIRUCHIRAPALLI C,No.IV/16/2847/2019 GST PLO (SVLDRS) date24,06,2020 கடிததின் **படி NELLIKUPPAM APPLICATION REFERENCE NUMBER LD3112190025577** 01.01.2015 முதல் 30.06.2017 வரை ரூ 524342 /— தொகை செலுத்த மன்ற தலைவர் முன்அனுமதிபெற்று நடைவடிகை மேற்கொண்டதை ஆங்கீகரிக்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்ற தலைவர் முன்அனுமதிபெற்று நடைவடிகை மேற்கொண்டதை அங்கீகரிக்க

**(ந.க.எண்.2599/2020/அ1)**

**<u>தீர்மான எண் : 89 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .</u>**

**மன்றபொருள்.21 .** துாய்மை இந்தியா திட்டப்பணிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து நக1ாட்சிகளிலும் பரப்புரையாளர்கள் மற்றும் ஒருக்கிணைப்பாளர்கள் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.2224/2017/பி1, நாள்.31.07.2017ன்படி செங்கல்பட்டு மண்டலம் அளவிலான செய்தித்தாள் விளம்பரம் செய்யப்பட்டதற்காக Acord விளம்பர நிறுவனத்திற்கு செலவினம் ரூ4,15,953/— மொத்தமாக தாம்பரம் நகராட்சியில் செலுத்தப்பட்டது. மேற்படி தொகையினை செங்கல்பட்டு மண்டலத்தில் உள்ள நகராட்சியினரால் ஈடுசெய்து கொள்ள வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் ந.க.எண்.2224/2017/பி1, நாள்.30.10.2017 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்டையில் தாம்பரம் நகராட்சியிலிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்.2210/2017/எச்1, நா..27.05.2020 நெல்லிக்குப்பம் நகராட்சிக்கான பங்கு தொகை ரூ.10000/— செலுத்துமாறும் இப்பொருள் தொடர்பாக தாம்பரம் நகராட்சியில் தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளதால் தொகையினை விரைவாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க தொகை ரூ.10000/— தாம்பரம் நகராட்சிக்கு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இத்தொகையினை துாய்மை இந்தியா இயக்கம் IEC நிதியிலிருந்து செலவு செய்திடவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2197/2020/7எச்1)**

**<u>தீர்மான எண் : 92 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி